# வாழ்வில் நிச்சய வெற்றிக்கு இருபது  வழிகள் - தெளிவு

இப்போது நாம் வெற்றிக்குத் தேவையான மூன்றாவது POINT  க்கு வருவோம். - அதாவது அடுத்த வழி என்பது -  நம் நோக்கத்தை பற்றிய,  இலக்கைப் பற்றிய ஒரு தெளிவு.   அதற்கான DIRECTION -  திசையை பற்றிய தெளிவு.   காரணம் நாம் இலக்கு ஒன்றை நிர்ணயித்த பிறகு அதற்காக நமக்குத் தெரிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என்ற ஆவலில் நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்போம்.   எது முதலில்,  எது  பின்னால்,  எது முக்கியம்,  எது சாரம், என்பது போன்றவற்றை திட்டமிடாமல் செய்து கொண்டிருப்போம்.  NOT FOCUSSED OR CHANNELIZED.  அகல உழுவதை விட ஆழ உழுவது மேல் என்பது பழமொழி.   இதுவும் இறைவனின் REAL IDEA  போன்றது.   அவனுக்கு எவ்வளவோ அல்லது அனைத்தும் தெரியும்.   ஆனால் ஒரு மனிதனுக்கு ஒரு பிறவிக்கு ஆனந்தம் பெற ஒன்று அல்லது இரண்டு idea  களையே வைக்கிறான்.   அடுத்த பிறவியில் அடுத்த IDEA -  அடுத்த அனுபவம் என்பதே வாழ்வின் சாரமாக இருக்கும் போது அதன் பகுதியான நாம் அனைத்தையும், அனைத்து நிலைகளையும் ,அது பற்றிய தெளிவு இல்லாமல் செய்தால் எதையும் சாதிக்க முடியாது.   அது போல ஒரு idea  வை எடுத்துக் கொண்டு TIME AND ENERGY  வீணாகாமல் நோக்கத்தை ஒட்டியே அனைத்தையும் செய்ய வேண்டும் என்றால் நோக்கம்,  அதை அடையும் பாதை,  அதன் மூலம் நாம் பெரும் வெற்றி ஆகியவற்றைப் பற்றிய தெளிவு இருக்க வேண்டும்.

உதாரணமாக ஒரு அணைக்கட்டில் ஏராளமான நீர் தேக்கி வைக்கப்பட்டு இருக்கிறது.   அதில் மின்சாரம் இருக்கிறது என்று விஞ்ஞானம் சொல்கிறது.  ஆனால் நமக்குத் தெரியாது.    ஆனால் அதை தேக்கி,  தெளிவான ஒரு சூழ்நிலையில் ஓடவிடும்போது அதற்கு ஒரு direction  கிடைக்கிறது.   அது CHANNELIZE  ஆகி ஒரு குறிப்பிட்ட ஆற்றலாக மாற dynamo, generator உபயோகப்படுத்தப்படுகிறது.   அதை உபயோகம் உள்ள ஒரு விஷயமாக மாற்ற wire, fuse  என்று கொண்டு போய் 10V - 100V-1000V bulb களுக்கு  ஏற்றார் போல செயல்படுத்தப்படும்  சக்தி ஆகிறது.   அது போல நம் நோக்கத்தைப் பற்றிய தெளிவு நமக்கு DIRECTION   ஐ கொடுக்கும்.   எந்த நேரத்தில் எதை வெளிப்படுத்த வேண்டும்,  எதை உபயோகித்து நம் ஆற்றலை முன்னேற்றத்திற்கான சக்தியாக மாற்ற வேண்டும், எந்த தேவைக்கு எந்த வகையான பண்புகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில் தெளிவு வேண்டும்.

நம் மனம் தான் நம் வாழ்வை நிர்ணயிக்கிறது என்றால்,  அந்த மனது வெளிப்படுவதற்கான ஒரு கருவி,  திசையை,  வழியை,  நிர்ணயிப்பது அதன்

சிந்தனை.  நம் நோக்கத்தை அடைய நம் சிந்தனை செல்லும் திசைகளை கவனித்தாலே நாம் அந்தப் பாதையில் தான் செல்கிறோமா என்பது தெரிந்துவிடும்.

அந்த  திடத் தீர்மானத்தை தருவது தெளிவு.  நாம் எதைப் பற்றி சிந்திக்கிறோம்,  எப்படி சிந்திக்கிறோம்,  அதை எப்படி அடையப் போகிறோம்,  அதை அடைய என்னென்ன செய்யப் போகிறோம்,  என்ற கேள்விகளை நாமே நம்மை கேட்டுக் கொண்டாலே நம் தெளிவின் நிலை நமக்கு புரிந்து விடும்.  எங்கு இருந்து ஆரம்பிப்பது என்பதன் தெளிவு இருக்கும்.  அது தன்னம்பிக்கையை தரும்.  கால விரயத்தை தடுக்கும்.

அறிவின் சுபாவம் ஆராய்ச்சி அது சக்தி FORCE.  அது ஏற்படுத்தும் ஒழுங்கு ஆற்றல்  - ENERGY.

தெளிவில்லாத நம்பிக்கை பேராசை,  மூடநம்பிக்கை.  அந்த தெளிவை நாடும் கேள்விகளை,  சந்தேகங்களை,  குழப்பங்களை தீர்த்துக் கொள்வது மிக முக்கியம்.  அவை  அறிவை கூர்மையாக்கும் , நம்பிக்கையை வளர்க்கும். காரணம் நம்மைப் பற்றிய,  நம் மனப்பான்மை,  திறமை குறைவு, குணக்குறைவு,  சுபாவக் குறைவு போன்றவற்றில் இருக்கும் கசப்பான உண்மைகளை நாம் ஏற்றுக் கொள்வதில்லை.  சூழலை,  சமுதாயத்தை,  சக மனிதர்களை அதற்கு நம்மை அறியாமலேயே காரணமாக்கி விடுவோம் என்பதால் நம் குறைகளை பற்றிய தெளிவு நமக்கு இருப்பதில்லை.  குறைந்த பட்சம் நமக்கு தேவையான தெளிவுகள்

-  என் குறைகள்,  தவறுகள் அனைத்தையும் உணரும் அடக்கம்.

-  பிறர் குறை கூறினால்,  அறிவுரை கூறினால்,  அவர்களுக்கு தகுதி இல்லை என்று நினைத்தால் கூட,  கோபப்படாமல்,  எதிர்க்காமல்,  எரிச்சல் படாமல் ஏற்றுக்கொள்ளும் மனநிலை.

- நம் நோக்கத்தின் பார்வையில் தவிர வேறு எந்த விதத்திலும் எந்த நிகழ்வையும் personal  ஆக எடுத்துக் கொள்ளக் கூடாது. முடிந்த வரை அமைதி, நிதானம் தேவை, படபடப்பால் , எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்வதால், அவரசப்பட்டு, IMPULSIVE ஆக , UNCONSCIOUS ஆக செய்வதால் சாதிக்கப் போவது ஒன்றும் இல்லை என்று புரிய வேண்டும். நம் நிதானம் தான் நம் ஆற்றல், நாம் அமைதியாக இருக்கும் போது தான் நாம் அதிக சக்தி படைத்தவராக இருக்கிறோம் என்பது புரிய வேண்டும்.

-யாருடைய வார்த்தைகளையும் நம்பாமல், அவர்களின் செயல்கள் மேல் நம் கவனம் இருக்க வேண்டும். அதன் அடிப்படையிலேயே எவரையும் JUDGE செய்ய வேண்டும்.

- நோக்கத்துக்கான உறவைத் தாண்டிய உறவு எதுவும் இருக்கக் கூடாது.

மேற்கண்டவற்றைப் பற்றிய ஒரு குறைந்த பட்ச புரிதல் வந்த பிறகு நம் நோக்கத்தை பற்றிய தெளிவை ஆராய வேண்டும்.

நான் பணக்காரனாக வேண்டும் என்பது எல்லோருடைய ஆசை, நோக்கம். ஆனால் அதன் தெளிவு என்பது 10 கோடியா, 100 கோடியா அல்லது 1000 கோடியா அல்லது உலகை சுற்றி பார்க்க, நினைத்ததை அனுபவிக்க என்று குறிப்பான அதை பற்றிய எல்லைகளே நமக்கு செயல்பட தேவையான தெளிவைத் தரும். இல்லையென்றால், இதே போல பிறர் செய்து இருந்தால், அவரை COPY அடிப்போம். அவர் நோக்கம், மனநிலை, சூழல், சுபாவம் அனைத்தும் வேறு என்பதால் நிச்சயம் அதே வெற்றி நமக்கு கிடைக்காது. கிடைத்தாலும், நாம் தேடிய ஆனந்தம் அதில் இருக்காது.

முன்பு சொன்னது போல நம் நோக்கம் மிகப் பெரியதாக இருக்க வேண்டும். அது தான் நம்மை, நம் LIMIT களை தாண்டி வர வைக்கும். அதனாலேயே நம்மை சிந்திக்கத் தூண்டும். நம்மை நம் அதிக பட்ச திறமையில் நின்று செயல்பட வைக்கும்.

அதன் பிறகு அதை அடைய வேண்டிய காலம் பற்றிய ஒரு தெளிவு வேண்டும். அப்போது தான் எங்கு தவறுகிறோம், எங்கு பின் தங்குகிறோம் என்பதை கவனிக்க முடியும். PhD மூன்று வருடம் குறைந்த பட்சம் என்றால், 10 வருடத்தில் முடிப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அது திறமை, தெளிவு அல்ல. கால ஓட்டமும், சூழலும் அதை சாதித்து இருக்கிறது. நாம் சாதிக்கவில்லை. அதனாலேயே அதற்கான ஆனந்தத்தை நாம் பெற முடிவதில்லை. 40 வயதில் உலகம் சுற்ற வேண்டும் என்னும் நோக்கத்தை வைத்துக்கொண்டு, 60 வயதில் அதை அடைவதில் என்ன ஆனந்தம் இருக்கும். அது போல, நம் காலம் பற்றிய தெளிவு நமக்குத் தேவை.

இந்த நோக்கத்தை அடைய நாம் என்னென்ன தியாகத்தை செய்யப் போகிறோம் என்பதில் தெளிவு வேண்டும்.

உடல் இளைக்க வேண்டும் என்றால் சில உணவு, ருசிகளை தியாகம் செய்ய வேண்டும்.

விளையாட்டு, படிப்பு என்று பலவற்றிலும் சாதிக்க வேண்டும் என்றால் பொழுது போக்குகளை, தியாகம் செய்ய வேண்டும் என்பது போல இந்த நோக்கத்தை அடைய நண்பர்கள், உறவுகளுடனான நேரங்கள், சமூக கேளிக்கைகள், விழாக்கள், நிகழ்வுகள், பலவற்றை தியாகம் செய்ய வேண்டி இருக்கும். அதை பற்றிய தெளிவு பின்னால் STRESS ஐ குறைக்கும்.

நம் personality என்பது ஒவ்வொன்றை பற்றியும் நமக்கு இருக்கும் தெளிவு என்பது நமக்கு புரிய வேண்டும். அதுவே, நம் நடத்தையை, மனப்பான்மையை, நம் சாதனையை நிர்ணயிக்கிறது என்பது புரிய வேண்டும்.

மேலே சொன்ன அனைத்தும் சிந்தனையால் வந்த மனதின் தெளிவு. இதை விதையாக சக்தி மிக்க விதையாக - அதன் ஆற்றல் வெளிப்பட்டு மரமாக வளர வேண்டும் என்றால் அது ஆர்வமாக மாற வேண்டும். அப்படி ஆர்வமாக மாறினால் தான் முன்பு சொன்ன திடத்தீர்மானம் - determination என்னும் நிலைக்கு செய்தே தீருவேன் என்ற நிலைக்க வர முடியும்.

அதற்கு ஒரே வழி நம் திட்டத்தை எழுதி பார்க்க வேண்டும். இதற்கு power of organization என்று பெயர். சிந்தனையில் நாம் பல விதங்களில் யோசிப்போம். அதை பிறருக்கு விளக்கும் போதும் ஏராளமான சொற்றொடர்களை உபயோகித்து விளக்குவோம். ஆனால் அதை எழுத்து வடிவில் கொண்டு வர வேண்டும் என்றால், சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், அதன் சாரம் புரியாமல் அந்த செயலை பற்றிய முழு தெளிவு இல்லாமல் எழுத முடியாது. அந்த தெளிவிற்கு தன்னைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும் ஆற்றல் உண்டு என்று என் குரு அடிக்கடி எனக்கு கூறுவார்.

எது ஆரம்பம், எது முடிவு, எது வழி என்று, எதற்கு அடுத்தது எது என்ற step by step plan அதில் வெளிப்படும். அது நமக்கு தெளிவு இருப்பதை காட்டும். அந்த தெளிவு, அறிவில், செயலில், நடத்தையில், மனப்பான்மையில், வெளிப்படும் போது தான் அதை சாதிக்க தேவையான மனிதர்கள், முதலீடுகள், சூழல்கள் ஆகியவற்றை நம்மை நோக்கி கொண்டு வரும். நமக்கு ஒரு தலைமை பண்பு வரும். இன்று இதை NLP - NEURO LINGUISTIC PROGRAMME என்று பயிற்சியாகவே பல இடங்களில் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக HR MANAGER - அடுத்து அறிவிக்க போகும் திட்டம், சட்டம்

ஆகியவற்றை இப்படி எழுதிப் பார்க்க வேண்டும் என்ற முறை பல கம்பெனிகளில் கட்டாயமாக்கப்பட்டு விட்டது. மனதில் இருந்து கைக்கு வருவது என்பது - சூட்சமத்தில் இருந்து ஜடத்துக்கு வருவது என்பதன் ஒரு குறியீடு . SYMBOLIC REPRESENTATION . அதனால் அது சாதிக்க தவறுவதில்லை. காரணம் நாம் ஒரு காகிதத்தில் இறக்கியது, உலகத்தில் படைக்கப்பட்டு (manifest) விட்டது என்பது பொருள்.

உதாரணமாக, சில வருடங்களாக கடனில் தத்தளித்த ஒரு நிறுவனத்தில் அன்பர் ஒருவர் மேலாளராக சேர்ந்தார். அதிக வட்டி கட்டும் கடங்களை அடைத்தால் தவிர முன்னேற்றம் இருக்காது என்னும் தெளிவு பெற்றவுடன் - பல விவாதங்களுக்கு பிறகு அதன் திட்டத்தை எழுத ஆரம்பித்தார். வர வேண்டியவைகளை எழுதி அதன் ஆதரங்களை தொகுத்தார். ரிடென்ஷன் எனப்படும் காப்புத்தொகை பலவற்றை கேட்காமல் வாங்காமல் விட்டு இருப்பது தெரிந்தது. அதே போல கொடுக்க வேண்டிவற்றையும் தொகுத்தார். தர வேண்டிய முறை ஒன்றை வகுத்தார். மிக எளிதில் பிரச்சினைகளை தீர்க்கலாம் என்று தெரிந்தது. அந்த நிறுவன தலைவருக்கே அது அப்போதுதான் புரிந்தது. அத்திட்டத்தின் படி வரவேண்டியவற்றை வசூலிக்க ஆர்மபித்தார். கொடுக்க வேண்டியவற்றை கொடுத்தார். பல வருட பிரச்சினை ஒரு வருடத்தில் தீர்ந்தது. மேனஜரின் பெண் அந்த நிறுவநரின் வீட்டிற்கு மருமகளாக வந்து இப்போது அந்த நிறுவனத்தின் தலைவராக உள்ளார். தெளிவு - ஆற்றல் ஆகி தன்னை தானே பூர்த்தி செய்து கொள்ளும் முறை இது.

35 வயதில் படிப்பில்லாமல் முன்னேற்றம் இல்லை என்ற தெளிவு எனக்கு மூன்று DEGREE ஐ தந்தது. ஆங்கிலம் பேசத் தெரியாமல் முன்னேற்றம் இல்லை என்ற தெளிவு எனக்கு ஆங்கில FLUENCY ஐ தந்தது. அதுவே ஹிந்தியை பற்றிய தெளிவு, தேவை என்ற determination ஐ தரவில்லை என்பதால் - படித்தால் கூட, கற்றுக் கொண்டால் கூட ஹிந்தி வரவில்லை. இவை எல்லாம் தெளிவு தரும், POWER OF ORGANIZATION க்கான உதாரணம். அது தன்னைத் தானே சாதித்து கொள்ளும் என்பதை பலமுறை நான் பார்த்து இருக்கிறேன். இதற்கு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், என் BUSINESS ஐ நான் தான் manage செய்கிறேன். அனைத்திலும் என் தலையீடு, என் முறைகள், என் எண்ணங்கள், அதன் வெளிப்பாடுகள் தான் இருக்கும். சரியா தவறா என்பதை தாண்டி என் முடிவுகள் தான் முன்னேற்றத்தை நிர்ணயிக்கும். நான் சில நாட்கள் இல்லை என்றால் அனைத்திலும் ஒரு சுனக்கம் இருக்கும். ஆனால் ஒரு பெரிய கம்பெனி என்றால் SOP என்னும் முறைகள் அனைத்திற்கும் இருக்கும், தனிப்பட்ட முடிவு என்று பெரும்பாலும்

இருக்காது. அதனால் அது அந்த கம்பெனியின் நோக்கத்தின் வெளிப்பாடாக மட்டுமே இருக்கும்.  யார் இருந்தாலும் இல்லையென்றாலும் அல்லது ஒரு பொறுப்பில் இருப்பவரின், திறமை, மனப்பான்மை, ஆகியவற்றைத் தாண்டி கம்பெனி சாதிக்கும்.  அதுவே POWER OF ORGANIZATION   தெளிவு அது போன்ற POWER OF ORGANIZATION ஐ  கொண்டது.  அது நாம் சாதனை புரிய தேவையான காலத்தை பல மடங்கு சுருக்கும்.

இதை மேலும் புரிந்து கொள்ள நாம் சாதாரணமாக நடை முறையில் முடிவெடுக்கும் தருணங்களை  DECISION MAKING PROCESS என்போமே, அதை ஆராய்ந்து பார்ப்போம்.   மனம் இரண்டு பகுதிகளால் ஆனது.   ஒன்று KNOWLEDGE -  ஞானம்.  மற்றொன்று WILL -  உறுதி.   மனம் புரிந்து கொண்டதை உணர்வு ஏற்றால் அது உறுதி Will ஆகிறது. மனமும்,  உணர்வும் சேர்ந்தால் அது முடிவு.  DECISION  ஆகிறது.   மனம் மட்டுமே புரிந்து கொண்டு உணர்வு தயங்கினால்,  அது OPINION -  அபிப்பிராயமாக மட்டுமே மாறி விடுகிறது. உணர்வு மட்டுமே அதை ஏற்றால் அது PREJUDICE -  முன் முடிவுகள் ஆகிவிடுகிறது.   இவை எல்லாம் குழப்பம், சந்தேகம் , அவ நம்பிக்கை ஆகியவற்றுக்கு காரணமாகிறது. அப்போது காரியம் செயல்படுத்த படாது அல்லது தள்ளிப் போடப்படும்.   அதற்கான காரணத்தை தேடும்.   இவை அனைத்தும் மேல் மனம்.   அறிவும்,   உறுதியும் ஏற்று ஒரு DECISION  எழுந்த பிறகு நமக்கு புது ENERGY  வருவதை காணலாம்.   அது மேல்மனதால் அல்ல. முடிவை நம் ஆழ்மனது ஏற்பதால் வருவது அது.   அதன் பெயர் DETERMINATION -  தீர்மானம்.   அதுவே செயலை சிறந்த முறையில் வெளிப்படுத்தி நாம் அடைய விரும்பிய நோக்கத்தை அடைய வைக்கும்.   நாம் விரும்பிய ஆனந்தத்தை பெற வைக்கும்.   தெளிவு என்பதன் process இதுதான் . இதை புரிந்து கொண்டால் நம் முயற்சிகள் நிச்சயம் நம்மை நம் இலட்சியத்தை அடைய சேய்யும்.